**செய்தி வெளியீடு எண்: 860** **நாள்:12.11.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

ஹஜ்–2021–ல் ஹஜ் பயணம் மேற்கொள்ள விரும்பும் தமிழ் நாட்டைச் சேர்ந்த முஸ்லிம் பெருமக்களிடமிருந்து, சில விதி முறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு மும்பை, இந்திய ஹஜ் குழு சார்பாக தமிழ் நாடு மாநில ஹஜ் குழு, ஹஜ் விண்ணப்பங்களை (HAFs) வரவேற்கிறது. சிறப்பு விதி முறைகள், விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள், தகுதிக்கான அளவுகோல்கள், வயது கட்டுப்பாடுகள், உடல் நலம் மற்றும் உடற்தகுதி தேவைகள் ஆகியவற்றுடன் ஹஜ் 2021 சிறப்பு சூழ்நிலைகளின் கீழ் நடைபெறும். மேலும் சவூதி அரேபிய அரசின் பிற தொடர்புடைய நிபந்தனைகள் கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு மத்தியில் அவை பொருத்தமானதாக உணரும் போது அவர்கள் மீது விதிக்கப்படலாம். ஹஜ் 2021–ற்கான ஹஜ் விண்ணப்பத்தின் முழு செயல்முறையும் சவூதி அரேபிய அரசின் இறுதி வழி காட்டுதல்களுக்கு உட்பட்டது. இந்திய ஹஜ் குழு மூலம் ஹஜ் 2021–ற்காக விண்ணப்பிக்கும் செயல்முறை 7.11.2020 முதல் ஆன்லைனில் தொடங்கி 10.12.2020 அன்று முடிவடைகிறது. விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்தை இந்திய ஹஜ் குழு இணையதளம் மூலம் அதாவது www.hajcommittee.gov.in என்ற வழியாகவும் அல்லது Google play store-ல் உள்ள மும்பை இந்திய ஹஜ் குழு செயலியினை ஆண்டராய்டு கைபேசியில் பதிவிறக்கம் செய்வதன் மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்யலாம் . புனிதப் பயணிகள் 10.12.2020 அன்று அல்லது அதற்கு முன்னர் வழங்கப்பட்டு குறைந்தது 10.1.2022 வரையில் செல்லத்தக்க இயந்திரம் மூலம் படிக்கத்தக்க பாஸ்போர்டின் முதல் மற்றும் கடைசி பக்கம், வெள்ளை பின்னனியுடன் கூடிய சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம், உறைத் தலைவரின் இரத்து செய்யப்பட்ட காசோலை நகல் மற்றும் முகவரிச் சான்றின் நகல் ஆகியவற்றை பதிவேற்றம் செய்ய வேண்டும். பதிவு கட்டணம் (நபரொருவருக்கு ரூ.300/–) ஆன்லைனில் மட்டுமே செலுத்த வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை தாங்களே பூர்த்தி செய்யலாம் அல்லது இணையதளக் கூடம் (Cybercafes), தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அல்லது தமிழ் நாடு மாநில ஹஜ் குழு மூலம் தங்கள் வசதிக்கேற்ப விண்ணப்பங்களை பூர்த்தி செய்யலாம். மெஹ்ரம் (ஆண்வழித் துணை) இல்லாமல் பெண்கள் மட்டும் செல்லும் வகையின் கீழ் ஹஜ் 2020–ற்கு பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் ஹஜ் 2021–ற்கு தகுதியுடையதாக கருதப்படும்.

ஹஜ் 2021–ன் குறிப்பிடப்பட்ட மாற்றங்கள்/அம்சங்கள் பின்வருமாறு:-

- வயது வரம்பு 18 வயதிலிருந்து 65 வயது வரை.
- 18 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

- ஒரு உறையில் (Cover) அதிக பட்சம் மூன்று (3) நபர்கள் விண்ணப்பிக்கலாம்.
- ஹஜ் பயணம் 30–35 நாட்கள்
- ஒரு புனிதப் பயணியின் தங்குமிட இடைவெளி 9 சதுர மீட்டர்.
- சமூக இடைவெளியின் விதிமுறைகள்.
- நிலைபடுத்தப்பட்ட பயணப்பெட்டிகள் இந்திய ஹஜ் குழு மூலம் வழங்கப்படும்.
- கொரோனா தொற்று நோயைக் கருத்தில் கொண்டு, ஹஜ் 2021–ற்கான புறப்பாடு தளம் 21–லிருந்து 10–ஆக குறைக்கப்பட்டுள்ளது. அதாவது, அகமதாபாத், பெங்களூரு, கொச்சின், டெல்லி, கௌஹாத்தி, ஹைதராபாத், கொல்கத்தா, லக்னோ, மும்பை மற்றும் ஸ்ரீநகர். புனிதப் பயணிகள் அருகிலுள்ள சிக்கனமான புறப்பாட்டு தளத்தை தெரிவு செய்வதற்கான விருப்பம்/தெரிவு எதுவும் வழங்கப்படவில்லை. தமிழ் நாட்டின் ஹஜ் புனிதப் பயணிகளைப் பொறுத்த வரையில் கொச்சின் புறப்பாட்டுத் தளமாக இருக்கும்.
- கொரோனா தொற்று நோய் காரணமாக அயல்நாட்டில் பணிபுரியும் இந்தியர்களுக்கு (NRI's) ஹஜ் மேற்கொள்ள எந்த ஏற்பாடும் செய்யப்படமாட்டாது.
- ஹஜ் முன்பணத் தொகை ரூ.1,50,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ஹஜ் கட்டணங்கள் சுமார் ரூ.3,70,000/– முதல் ரூ.5,25,000/– வரை அதிகரிக்க நேரிடும்.

ஹஜ் 2021 பற்றிய விவரங்களுக்கு, புனிதப் பயணிகள் ஹஜ் 2021–ற்கான வழிகாட்டுதல்களைப் படிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு, விண்ணப்பதாரர்கள் இந்திய ஹஜ் குழுவின் ஹஜ் தகவல் மையத்தை தொடர்பு கொள்ளலாம்: 022–22107070 ( 100 தொடர்பு எண்கள்).

**முதன்மைச் செயலாளர்**
**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்**
**மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**